[2005 மார்ச் 30

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவிகளுக்கு புதிய விடுதிக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டடம் கட்டும் பணி எப்போது தொடங்கும்?

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவிகளுக்கு புதிய விடுதிக் கட்டடம் கட்டும் திட்டம் இந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 252, திரு. எஸ். மாணிக்கராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

252—

கால்நடை மருத்துவமனை

***41339—திரு. எஸ். மாணிக்கராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி, தோட்டக்குடி ஊராட்சி, மருதகுளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி, தோட்டக்குடி ஊராட்சியில் உள்ள மருதகுளத்தில் 3904 கால்நடைகள் மட்டுமே உள்ளதாலும், தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், அரசின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாகவும், மருதகுளம் கிராமத்தில் எந்தவொரு கால்நடை கிளை நிலையமும் செயல்படாத நிலையில், அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2005 மார்ச் 30]

திரு. எஸ். மாணிக்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னிலையில் சட்டமன்றத்தில் நான் வைத்த கோரிக்கையான, எனது தொகுதிக்குட்பட்ட திட்டங்கள் அத்தனையும் செய்து தந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, நாங்குனேரி சட்டமன்றத் தொகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. வேலைவாய்ப்பு இல்லாத பகுதி. மகளிர் பெரும்பாலோர் விவசாய கூலி வேலை செய்து வருகின்றனர். அவர்கள் ஆடு-மாடுகள் வளர்த்து வருகின்ற நிலையிலே, நாங்குனேரியிலே மட்டும்தான் அந்தக் கால்நடை சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. மருதகுளத்தைப் பொறுத்தவரையில் 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு கிளை சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதியிலுள்ள மக்கள் ஆடு-மாடுகளுக்கு சிகிச்சையைப் பெறுவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று புதிய கால்நடை கிளை நிலையங்கள் ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கும்போது, மருதகுளம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஏற்படுத்த கவனத்தில் கொள்ளப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். மாணிக்கராஜ்.

திரு. எஸ். மாணிக்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குனேரி தொகுதி, மருதகுளம் கிராமத்திற்கு அருகில் கால்நடை மருத்துவ நிலையங்கள் ஏதுமில்லை. இதனைச் சுற்றியுள்ள கிராம மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இங்குள்ள கால்நடைகளுக்குச் சிகிச்சை பெற தற்போது வழியுண்டா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிச்சயமாக இந்த நிதியாண்டில் நிதிநிலைக்கு ஏற்ப மருதகுளம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் தொடங்க வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பக்கத்து ஊருக்குக் கொண்டு போக வேண்டியதுதானே? திரு. லா. சந்தானம். (குறுக்கீடு)

திரு. எஸ். மாணிக்கராஜ்: நன்றி.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கால்நடை மருத்துவமனைகள் தொடங்குகின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? அப்படியென்றால் எத்தனை கால்நடை மருத்துவமனைகள், தமிழகத்திலே இந்த ஆண்டு தொடங்கவிருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே பதில் சொல்வார்கள்.

வினா எண் 253, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

253—

வனநில ஆக்கிரமிப்பு

***51099—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் வனங்களுக்கு அருகில் உள்ள பட்டா உரிமையாளர்கள் மற்றும் எஸ்டேட் உரிமையாளர்களால் வன நில ஆக்கிரமிப்பு செய்யப்படுவதை தடுப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பட்டா உரிமையாளர்கள் மற்றும் எஸ்டேட் உரிமையாளர்கள் வன நிலங்களை ஆக்கிரமிப்பு செய்யவில்லை. அதனால் ஆக்கிரமிப்பை அகற்றும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கா.தி. இளையகண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு தொகுதி, ஏற்காடு மலையில், பிரசித்திபெற்ற சேர்வராயன் கோவில் உள்ளது. இந்தக் கோவிலில் தரிசனம்